
# தியாக தீபம்



அமரர்

## சிவத்திரு.காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா (ஆதி)

([illegible])


அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**06.08.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# சிவத்திரு.காசிப்பிள்ளை
# ஆறுமுகம் தியாகராசா (ஆதி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர்

# தியாக தீபம்

06.08.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய், புகழ்மிக்க

பெருந்தகையாய், அம்பாளின் அறங்காத்த

அருந்துணையாய், பண்பு நிறைந்த

தந்தையாய் அன்புடன் எம்மைப் பேணிக்காத்து

ஒளிவிளக்காகத் திகழ்ந்து எம்மை நல்வழி

நடாத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

நயினை நாகபூஷணி அம்பிகையின்

மகோற்சவ காலத்தில் வானுறையும்

தெய்வமாகிவிட்ட எமது குடும்பத்தலைவரின்

பொன்னார் திருவடிகளுக்கு இம்மலரினைக்

காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"



அன்னை மடியில்

25 . 02 . 1938

அம்பிகை அடியில்

07 . 07 . 2022

அமரர்

# காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா

## (ஆதி)

(மரபுவழி அறங்காவலர் நயினை நாகபூஷணி அம்மன் கோவில், ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர் தீவகம் தெற்கு வேலணை)

## திதி நிர்ணய வெண்பா

இருபத்து மூன்றானி இலங்கும் சுபகிருது
தருபூர்வத் தட்டமிசேர் குருநாளில் - அருளோங்கும்
நாகம்மை கொடியேறி நவநாளில் அவளடிக்கே
பாகமுறச் சென்றிட்டார் ஆதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பிள்ளையார் துதி

திருச்சிற்றம்பலம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

## *திருஞானசம்பந்தர் தேவாரம்*
## *முதலாம் திருமுறை*

**பண் – குறிஞ்சி**

அரையார் தருநாக மணிவா னவர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி
வரையா னெருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே.

**பண் – மேகராகக்குறிஞ்சி**

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் – குறிஞ்சி

ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி
இலங்கிளை யரிவையொ டொருங்குடனாகிக்
கூறுமொன்றருளிக் கொன்றையந் தாருங்
குளிரினமதியமுங் கூவிளமலரும்
நாறுமல்லிகையு மெருக்கொடு முருக்கு
மகிழிள வன்னியு மிவைநலம் பகர
ஆறுமோர் சடைமே லணிந்தவெம் மடிகள்
அச்சிறுபாக்கம தாட்சி கொணடாரே.

## இரண்டாம் திருமுறை

பண் – சீகாமரம்

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு வொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

பண் – பியந்தைக்காந்தாரம்

பல பல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பண் – செவ்வழி

தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

பண் – கொல்லி

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

பண் – கொல்லி

பாலனா ராருயிர் பாங்கினா லுணவரும்
காலனா ருயிர்செகக் காலினாற் சாடினான்
சேலினார் கண்ணினாள் தன்னொடுஞ் சேர்விடம்
மாலினார் வழிபடு மாமழ பாடியே.

பண் – கொல்லி

சந்திரன் கதிரவன் தகுபுக ழயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமி லழகனை யடிபணிந் துய்ம்மினே

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
## நான்காம் திருமுறை

பண் – கொல்லி

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச்
சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன
மொய்த் திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன
பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடும்
ஐயாற னடித்தலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியைக் குதிரை செய் வானும்
நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண்டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட
முன்பணிந் தன் பர்க ளேத்த
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூரமர்ந் தவம்மானே.

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன் நின்றஇப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மார்க்கும் ஐயாற னடித்தலமே.

## *ஐந்தாம் திருமுறை*

வண்டு லாமலர் கொண்டு வளர்சடைக்
கிண்டை மாலை புனைந்து மிராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்
கண்ட மாளவும் வைப்ப ராரூரரே.

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே.

சந்தி ரன்னொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்த பின்
ஐந்த லையர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச் சரவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் திருமுறை

### திருநாவுக்கரசு சுவாமிகள்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

கைத்தலங்க ளிருபதுடை அரக்கர் கோமான்
கயிலை மலை அதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக ளெற்றி
முடுகுதலுந் திருவிரலொன் றவன்மேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிந்தவனுக் கிராவணனென் றீந்த நாமத்
தத்துவனைத் தலையாலங் காடன் தன்னைச்
சாராதே சாலநாள் போக்கி னேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனை யெறிமணியி னோசை யானை
அண்டத்தார்க் கறிவொண்ணா தப்பால் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை தொன்னூல் பூண்ட
வேதியனை அறமுரைத்த பட்டன் தன்னை
விளங்குமல ரயன்சிரங்கள் ஐந்தி லொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

## ஏழாம் திருமுறை
## சுந்தரமூர்த்தி நாயனார்

**பண் – தக்கராகம்**

குரும்பை முலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு
குறிப்பினொடு சென்ற வள் தன் குணத்தினை நன்கறிந்து
விரும்புவரம் கொடுத்த வளை வேட்ட ருளிச்செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவிய ஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழயலின்
கரும்பருகே கருங்குவளை கண் வளரும் கழனிக்
கமலங்கள் முகம் மலரும் கலயநல்லூர் காணே.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியன் ஆதிரை யன் அயன் மாலறி தற்கரிய
சோதியன் சொற்பொரு ளாய்ச்சுருங் காமறை நான்கினையும்
ஓதியன் உம்பர்தங் கோனுல கத்தினு ளெவ்வுயிர்க்கும்
நாதியன் நம்பெரு மான்நண்ணு மூர்நனி பள்ளியதே.

இந்திரன் மால்பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை யருள் புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே.

### *எட்டாம் திருமுறை*
### *திருவாசகம்*
### *மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது*

தந்தது உன் தன்னை் கொண்டது என் தன்னை்
சங்கரா ஆர் கொலோ சதுரர்?
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன்று என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே!
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்!
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே.

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவினாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா !நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாய்த்
தொண்டனேன் நுகருமா நுகரே.

பவளமால் வரையைப் பனி படர்ந்
தனையதோர் படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
குன்று பொற் குழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல் மெழுகொக்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழி செழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயிரவரொடும்
குடி வாழ்க்கை கொண்டு நீ குலாவிக் கூத்தாடினையே.

## ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன் அடி
யோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாராந் தொல்புகள் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ் செய் குடிப்பிறந்த
பழ அடி யாரொடும் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரம் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமை மண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண் டகனத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பத்தாம் திருமுறை
### திருமந்திரம்
### திருமூலர் அருளியது

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகும் ஆறறி யேனே.

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கு மாமது தானே

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பி என் உள்ளே நயந்துவைத் தேனே.

தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே.

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதமே

பின்னை நின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன் றாகத் தமிழ்செய்யு மாறே.

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் கட்டி
எடுக்களத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.

(நம்பியாண்டார் நம்பி)

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர் - நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற் காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு

(காரைக்கல் அம்மையார்)

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ! - காகம்
குருவி பறவாமல் கோதாட்டில் என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்கவே.

(பட்டினத்தார்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் அநுபூதி

*நா நலம் பெற*

பூவார் புனிதா! புவனத் தலைமைத்
தேவா! கரியின் சிரமே உளவா!
மூவாத் தமிழால் முறையே உனை என்
நாவால் புகழும் நலமே அருள்வாய்.

*முழுமுதலை உணர*

அத்தே தவர்களும் அயன் மால் அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்
சுத்தா கரிமா முகத்தான் எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே!

*பேரின்பம் பெற*

ஒருகொம் புடையான் உயர்மோ தகமே
விரும்பும் பெருமான் விடையோன் குமரன்
சுரும்பார் தொடையன் சுகமா குமெலாம்
அருள்வான் அருள்வான் அடியார் அவர்க்கே!

*நல்ல புலமை பெற*

பல்காப் பியங்கள் பகரும் திறமும்
ஒல்காப் புகழும் உயர்செல் வமதும்
நல்காய் நலமாய் நளின மலர்த்தாள்
செல்வா! திகழ்சித் திவிநா யகனே!

*வறுமை நீங்கிச் செல்வம் பெருக*

பொல்லா வறுமை புரைசால் கொடுமை
எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே
வல்லாய் வருவாய் வளமே தருவாய்
உல்லா சமிளிர் ஒருகை முகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரெட்டாம் திருமுறை
## திருப்புராணம்
## சேக்கிழார் அருளியது

ஆதியாய் நடுவும் ஆகி அளவு இலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணும் ஆய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேல் ஆம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்பு உற நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்பு உண்டேல் உனை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

சொல்லுவது அறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்து அருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கு அருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி என்ன

எழுதாத மறை அளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதார்வ முறநிலத்தில் தோய்ந்தெழுந்தே அங்கமெலாம்
முழுதாய பரவசத்தின் முகிழ்த் தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார்

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத வுணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி யம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டு
ஈனந்தங் கியதிலதாம் என்ன அதி சயமென்றார்.

சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கையுழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய.

## திருப்புகழ்

### அருணகிரிநாதர்

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர ...... கமுநீபப்

பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை ...... வடிவேலும்

திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப ...... னிருதோளும்

செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை ...... மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை ...... இளநீர்வண்

டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை ...... தனிமூலம்

மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் ...... அருளாழி

வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி

இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே

தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே

அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து ...... தெளியேனே

மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம ணிந்து ...... பணியேனே

ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று ...... தெரியேனே

ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப ...... தறியேனே

நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து ...... திரிவேனே

நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று ...... தொழுகேனே

சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து ...... எனையாள்வாய்

சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிமுத னாளி லென்றன் தாயுடலி லேயி ருந்து
ஆகமல மாகி நின்று ...... புவிமீதில்

ஆசையுட னேபி றந்து நேசமுட னேவ ளர்ந்து
ஆளழக னாகி நின்று ...... விளையாடிப்

பூதலமெ லாம லைந்து மாதருட னேக லந்து
பூமிதனில் வேணு மென்று ...... பொருள்தேடிப்

போகமதி லேயு ழன்று பாழ்நரகெய் தாம லுன்றன்
பூவடிகள் சேர அன்பு ...... தருவாயே

சீதைகொடு போகு மந்த ராவணனை மாள வென்ற
தீரனரி நார ணன்றன் ...... மருகோனே.

தேவர்முநி வோர்கள் கொண்டல் மாலரிபிர் மாவு நின்று
தேடஅரி தான வன்றன் ...... முருகோனே

கோதைமலை வாழு கின்ற நாதரிட பாக நின்ற
கோமளிய நாதி தந்த ...... குமரேசா

கூடிவரு சூரர் தங்கள் மார்பையிரு கூறு கண்ட
கோடைநகர் வாழ வந்த ...... பெருமாளே.

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து ...... இளைஞோனாய்

அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து ...... பதினாறாய்

சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து ...... துதியாமல்

தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற ...... னடிசேராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த ...... மகதேவர்

மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க ...... வடிவேலா

பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த ...... கழல்வீரா

பரமபத மாய செந்தில் முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த ...... பெருமாளே.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் ...... பெருமாள்காண்

செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் ...... பெருமாள்காண்

மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் ...... பெருமாள்காண்

மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் ...... பெருமாள்காண்

அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் ...... பெருமாள்காண்

அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் ...... பெருமாள்காண்

இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் ...... பெருமாள்காண்

இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் ...... பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை
யெடுமெடென வீட்டி ...... லனைவோரும்

இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டில்
எரியளரி மூட்டி ...... யிடுமாறு

கரியஇரு கோட்டு முரணெருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி ...... யழையாமுன்

கனகமணி வாட்டு மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி ...... யருள்வாயே

பருவமலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி ...... மணவாளா

பகைஞர்படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட ...... குமரேசா

அருமறைகள் கூட்டி யுரைசெய்தமிழ் பாட்டை
அடைவடைவு கேட்ட ...... முருகோனே

அலைகடலி லீட்ட அவுணர்தமை யோட்டி
அமரர்சிறை மீட்ட ...... பெருமாளே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.

அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகேஸ்வரியம்மை பதிகம்
# அராலி முத்துக்குமாரப் புலவர் அருளியது

ஆகமது கூனித்தளர்ந்துரோ மம்வெளுத்
	தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
	ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமைபிடர் நெளியவரு ஞமனெனற்கு
	விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
	வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்து நின் றடிமைகொண் டெனையும் நீ
	பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
	பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவன மேவுமுனி வோர்களுறை
	நாடி வரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
	நாக ஈஸ்வரியம்மையே.

கந்தான சொசியச் சினக்கும் கடாதடக்
	கைமலை முகத் தவுணனைக்
கால் கொண் டுதைத்துவன் றோலுரித் துப்போர்த்த
	காதலனை மன்றாடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
	முடிவிலா துயிர்க ளுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
	மூவுலகு நீ ஆகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தா குலங்கொண்டு திரியநான் முறையோ
தினம் தினம் சொல வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
திருப்பினால் வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

### *பெற்றதா லன்னை...*

பெற்றதா லன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடவோ
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
முதவலா லன்னை யெக்கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாகபூடணியால்.

(வே.நாகமணிப்புலவர்)

கற்பகக் கன்றை கடம்பனைத் தந்த கனகவரை
அற்புத மோன வருணாகந் தாங்கும் அமிர்தவல்லி
தற்பரன் வாமந் தழைத்தே சகல உயிர்களுக்கும்
நற்பதியே எனைப் பெற்ற சதானந்த நாகம்மையே.

(நயினைச் சித்தர் முத்துக்குமாரசுவாமி)

அண்ட கோடிகளெல்லாம் ஒரு தலையில்
நீ சுமந்தருளுதலினால் அல்லவோ
அம்புயப் பிரமன் படைக்கத் தொடங்கினான்
அகிலமும் சிதைவுறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்டரீக லோசனன் பாதுகாக்கின்றனன்
புராந்தகன் சங்கரித்துப் புகழ் மருவுகின்றனன்
இணங்கி நீ தயை புரியா திருந்தையேனில்
எண்டிசையும் கிரியும் பாவு கடலும்
எப்படி நிலைத்திடும் எவ்விதத்தினில்
அந்த மூவர் தொழில் ஈடேறும்
ஈசன் அரவிந்த பாதத் தொண்டர்கள் சூழ் இலங்கை
நயினா நகர் துதிசெய்யும் படி அமர்ந்தோய்
சுரலோக லோகேந்திரர் நரலோக புவனேந்திரர்
தொழவாழும் நாகேஸ்வரியே.

காரொழுகும் குழலாளை கருணை வடிந்தொழுகும்
இரு கடைக்கண்ணாளை
மூரலிள நிலவெறிப்ப அழகொழுகப்
புனுகொழுகும் முகத்தினாளை
வாரொழுகும் தனத்தாளை வடிவொழுகித்
தெரிவரிய மருங்குலாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருளை
உண்ணா முலையாளைச் சிந்தை செய்வாம்.

"தாயேயாகி வளர்த்தனை போற்றி
போற்றி என் வாழ்முதலாகிய பொருளே"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினைச் சித்தர்
# ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள்
# இயற்றிய நமச்சிவாய மாலை

1. தீதகல் மனத்தார்க் கென்றுந் திருவுளம் பற்றித் தீய
பாதக மனைத்துந் தீர்க்கும் பசுபதி நமச்சிவாயம்

2. சாதனை செய்யேன் நின்றன் தாள்தொழு துய்யேன் மாயா
வேதனை எய்தா தென்னை ஆண்டருள் நமச்சிவாயம்

3. மங்கையோர் பாகா வேகா மதிகதிர் தவழும் கற்றைக்
கங்கையார் தரனே முக்கட் கடவுளே நமச்சிவாயம்

4. நாரண ரயனுந் தேடி நாடுதற் கரிய சோதி
ஆரண முடிவுந் தேரா ஐயனே நமச்சிவாயம்

5. ஐயனே அருளானந்த அப்பனே அடியே னில்லல்
பொய்யெலாம் தடுத்தாள் ஞானப் பூரணா நமச்சிவாயம்

6. ஆற்றிலேன் போற்றி செய்கேன் அறிவை மாலாக்கும் மாய
கூற்றெலாம் தடுத்தாள்ஞானக் குருபரா நமச்சிவாயம்.

7. பலபல நினைவாற் பாத பங்கயம் பற்றாதாழி
அலையின் வாய்த் துரும்பதாகா தாண்டருள் நமச்சிவாயம்

8. பொன் துணை தருமோவிந்தப் புவிதுணை தருமோவையா
நின்துணையல வோ வென்றன் உயிர்த்துணை நமச்சிவாயம்

9. சத்தியாச் சிவமாய்ச் சர்வம் தானுமாய் தனியாய் மோன
முத்தியாம் வித்தே முக்கண் முதல்வனே நமச்சிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. காலனை யுதைத்துத் தேவர் கடும்பய மொழித்து ஆல
காலநஞ்சுண்ட வாதி ஐயனே நமச்சிவாயம்

11. காமனை யெரித்தாங்காரக் கரிதனை யுரித்துத் தக்க
னாமவன் வேள்வி சாய்த்த அப்பனே நமச்சிவாயம்

12. அயன்றலை கிள்ளிப் பொல்லா அசுரரை அரிந்து சிங்கம்
ஐயங்கெட வாங்கும் சிம்புட் தேவனே நமச்சிவாயம்

13. புலிதனை யுரித்துப் பாம்பைப் பூண்பணியாக்கிக் கொன்றை
மலிசடைக் கங்கை வைத்த வள்ளலே நமச்சிவாயம்

14. பாத்திரமேந்தித் தாருகா வனத்தவர் மயங்க
காத்திரமாகி நின்ற கடவுளே நமச்சிவாயம்

15. சிரித்து முப்புரம் வில் வாங்கித் தீயெ வெரித்து ஒப்பில்
ஒருத்தனாய் நின்ற கோரருத்திர நமச்சிவாயம்

16. நரிதனைப் பரியதாக்கி நம்பினார்க் கின்ப ஞானக்
குருபரனாயிருந்த கொற்றவா நமச்சிவாயம்

17. மண்ணினைச் சுமந்து பிட்டு வாங்கி யுண் டடிமையென்ற
பெண்ணினுக் காளாய் வந்த புண்ணியா நமச்சிவாயம்

18. கண்ணினுள் மணியாய் எங்கும் கலந்துயிர்க் குயிராய்த்தங்கும்
எண்ணரிதான மோன இறைவனே நமச்சிவாயம்

19. புண்ணிய உருவே ஞானப் பூரண குருவே யென்றன்
கண்ணினிற் கருவே முக்கட் கடவுளே நமச்சிவாயம்

20. பெண்ணுமா யாணாய்ச் சர்வபொது நடக்குருவாய் ஞானக்
கண்ணுதற் பரமனாய் நிற்கும் கடவுளே நமச்சிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அருவுமாய் உருவாய்ச் சோதி அருள்ஒளி வெளியாய் ஒப்பில்
திருவுருவுமாய்க் குருவாய் நின்ற தெய்வமே நமச்சிவாயம்

22. அரசருக் கரசராகி அம்மையோ டப்பனாகிப்
புரவலர் வணங்க வாழ்ந்த புனிதனே நமச்சிவாயம்

23. இந்திரன் பழியைத் தீர்த்து இராவணன் மயங்கவூன்றிச்
சுந்தரற் காகத் தூது சென்றவா நமச்சிவாயம்

24. பன்றியின் குட்டி கட்குப் பால்கொடுத்துலக முய்ய
மன்றினில் நட்டமாடு மாதவா நமச்சிவாயம்

25. பிள்ளையைக் கறியதாக்கிப் பின்னதை யெழுப்பி
அன்பருள்ளமே களிக்க வந்த உத்தமா நமச்சிவாயம்

26. யாதினு மரிய ராகி அடியவர்க் கெளியராகி
வாது செய் அசுரை மாய்க்க வருகுரு நமச்சிவாயம்

27. தீதற வடியார்க் கின்பத் திருவிளையாடல் காட்டிப்
பாதபங்கயத்தாள் சூட்டு பசுபதி நமச்சிவாயம்

28. பக்தர்கள் பிழைக்க விந்தப் பாரெல்லாம் தழைக்கச் சர்வ
சித்தர் தம் உருவாய் வந்த தேசிகா நமச்சிவாயம்

29. வாமமீதுமையை வைத்தும் மன்றினில் நடித்தும் சைவ
ஆகம முரைத்த தெம்மை ஆளவே நமச்சிவாயம்

30. அடியவர்க் கடியராகி அவருளம் குடியராகி
முடிவிலா வின்பம் நல்கும் முதல்வனே நமச்சிவாயம்

31. அமலனே ஆதியானே அப்பனே ஒப்பில்லாத
விமலனே என்னையாண்ட மெய்யனே நமச்சிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. மெய்யனே ஐயா வெப்ப வினைப்பிறப்பறுத்துச் சேயே
னுய்யவற்புதத்தாள் தந்த ஓம் சிவ நமச்சிவாயம்

33. மான்மழுச் சூலமேந்தி மதிகதிர் கங்கை தாங்கி
ஆன்முதுகேறுஞ் சோதி ஐயனே நமச்சிவாயம்

34. அக்கொடு தலையும் பாம்பும் அணிபணியாக் கொன்றை
கொக்கிற கறுகுதும்பைக் கொற்றவா நமச்சிவாயம்

35. அக்கினியுடுக்கை வில்வேல் அபயநல வரதம் ஜீவர்
விக்கினந் தீர்க்க வந்த வேடமே நமச்சிவாயம்

36. கோவண உடைபுலித்தோல் கொடுவிடங்குடையதாக
ஆவிடை உமையாள் பாகத் தப்பனே நமச்சிவாயம்

37. சுத்த வெண்ணீறுஞ் சாந்துந் துய்ய முப்புரிநூல் மார்பும்
வித்தக வேட ஞான மெய்க்குரு நமச்சிவாயம்

38. பொன் பொருள் போகம் நல்கிப் பிழைபொறுத்துயிர் கட்கெல்லா
மன்பனே இன்ப ஞான அருட்குரு நமச்சிவாயம்

39. தந்தையர் தாயராகி சகோதரர் தாரமாகி
இந்திரஜாலங் காட்டு மிறைவளே நமச்சிவாயம்

40. மந்திரமருந்தாய் அன்பர் வடிவமாய் மயக்கம் தீர்க்கும்
தந்திரதவமாய் வந்த சற்குரு நமச்சிவாயம்

41. மூர்த்திபே தங்க ளாகி வினைகளுக் கொப்ப நல்ல
தீர்த்தமாய்த் தலமாய் வந்த தெய்வமே நமச்சிவாயம்

42. உள்ளுமாய்ப் புறம்புமாகி யோகியாய்ப் போகியாகி
எள்ளொடு எண்ணெய் போலங்கு மிருந்தருள் நமச்சிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. வாக்கொடு மனதுக் கெட்டாவருள் அறிவாகி அப்பாற்
போக்கொடு வரவு மில்லாப் பூரணா நமச்சிவாயம்

44. வானொடு நிலநிர் தீயாய் வாயுமற் றவையாய் வேறாய்க்
கோனொரு குருவாய் நின்ற கோலமே நமச்சிவாயம்

45. குற்றமாய்க் குணமாய் வேறாய்க் குணகுணி கோளாய் நாளாய்
மற்றெவைக் கெல்லாம் சாட்சி வடிவனே நமச்சிவாயம்

46. அணுவினுக் கணுவதாகியாதினும் பெரியதாகி
மணமலர் வாழ்வாய் ஏக மானவா நமச்சிவாயம்

47. சரமச ராதியெல்லாம் தந்தவை உடனாய் வேறாய்
வரமருள் மௌனானந்த மாதவா நமச்சிவாயம்

48. நரர் சுரர் நாகற்காதி நாதனாய் நவைகடிந்து
பரகதி தரு மெய்ஞ்ஞானப் பசுபதி நமச்சிவாயம்

49. கொடியனேன் றன்னை ஆண்ட குருமணிகோதிலாமெய்
அடியவர்க்கின்ப வாழ்வே அமலனே நமச்சிவாயம்

50. அடியருக்கின்பமாகி அனைத்துயிர்க கன்பராகி
மிடிவினையிடர் கடிந்தாள் மெய்யனே நமச்சிவாயம்

51. மெய்யர்கள் மெய்யாதுய்யா விமை மறந்துழலும் வஞ்சப்
பொய்யருக் கெட்டாதானே புனிதனே நமச்சிவாயம்

52. நீறணி பவளக் குன்றறே நிருத்தனே பொருத்த கங்கை
ஆறணி சடையினானே ஐயனே நமச்சிவாயம்

53. ஆறணி சடையினானே அப்பனே அன்பே அம்மை
கூறனே அறவெள்ளேற்றுக் கொடியனே நமச்சிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. சித்தனே சிவனேயெங்கள் தெய்வமே தேவதேவே
அத்தனே அமரரேறே ஐயனே நமச்சிவாயம்

55. பக்தர்கள் உள்ளக்கோயிற் பங்கயத்தினிது வீற்ற
மற்றவர் அறியாயின்ப அமலனே நமச்சிவாயம்

56. கற்றவர் கல்லாதார்க்கும் கருணை ஒன்றாகி மெய்யன்
புற்றவர் இன்ப நல்கு மிறைவனே நமச்சிவாயம்

57. நெற்றியினாட்டம் ஞான நிருத்த இட்டமைத்த மெய்யன்
புற்றவர்க்கின்ப நல்குமிறைவனே நமச்சிவாயம்

58. நற்றவ நிதியே ஞான நடமிடுபதியே மெய்யன்
புற்றவர்க்கின்ப வாழ்வே இறைவனே நமச்சிவாயம்

சுபம்

### *வாழ்த்து*

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செந்நன்றி கொன்ற மகற்கு"


அன்பாலும் பண்பாலும் அரவணைத்து, அறிவுச் சுடரேற்றி, இன்புற்றிருக்க எல்லா வகையிலும் ஏணியாய் இருந்த எமது குடும்பத்தின் ஆணிவேர் திருமிகு.கா.ஆ.தியாகராசா அவர்கள் சிலநாட்கள் நோயுற்றிருந்த வேளையில் அவரைக்குணப்படுத்த அல்லும் பகலும் அயராது உழைத்த யாழ் போதனா வைத்தியசாலை, நொதேன் வைத்தியசாலை ஆகியவற்றின் மருத்துவர்கள், தாதியர்கள் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் 07.07.2022 வியாழக்கிழமை பகல் இறைபதம் அடைந்த செய்தியை அறிந்து இன்று வரை நேரில் வருகை தந்தும், தொலைபேசி, தந்தி, கடிதம், சமூக வலைத் தளங்கள் மூலமாக உள்நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலிருந்தும் எமக்கு ஆறுதல் கூறித்தேறுதல் அளித்த எமது அன்புள்ளங்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், துயர்பகிர்வுப் பதாதைகள், பத்திரிகை மூலமான துயர் பகிர்வுகள், மலர் மாலைகள், மலர் வளையங்கள், மலரஞ்சலிகள், அஞ்சலி உரைகள், புலம்பெயர் நாடுகளில் நினைவு நிகழ்வுகள் ஆகியவற்றை நடாத்திய அன்பர்களுக்கும், அன்னாரின் பூதவுடல் தாங்கிய பேழையை நல்லூர் இல்லத்திலிருந்து நயினாதீவு சல்லி வரவை மயானம் வரை கொண்டு செல்வதற்கு சகல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும், இறுதி யாத்திரையை உயரிய மதிப்பார்ந்த முறையில் நடாத்திய அன்புள்ளங்களுக்கும், பல்வேறு போக்குவரத்துக் கஸ்டங்களுக்கு மத்தியிலும் இறுதிக் கிரியை மற்றும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் இறுதிக் கிரியை மற்றும் அந்தியேட்டிக் கிரியைகளை செவ்வனே நடாத்திய அந்தண சிவாச்சாரியார் களுக்கும் இறைபதம் எய்தியது முதல் இற்றைவரை எம்மோடிணைந்த உறவுகளுக்கு கால மறிந்து வேளை தவறாது தேநீர், சிற்றுண்டி, உணவு உபசரிப்புக்களை வழங்கிய அயலவர்கள், உற்றார், உறவினர்கள், அனைவருக்கும் குறுகிய காலத்தில் நினைவு மலரைப் பிழையற, அழகுற அச்சிட்டு வழங்கிய மதிகலர்ஸ் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுறவேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தரணியில் சாந்தியையே தருவாய் நீயே!



Pirnted:- Mathi Colours, Nallur. 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org